# பொதுக்காலம் 18ஆம் ஞாயிறு

## திருவழிபாடு ஆண்டு - A

**2017-08-06**

# ஆண்டவரின் தோற்றமாற்றம் விழா

### திருப்பலி முன்னுரை

உருமாற அழைக்கப்பட்டவர்களே,
ஆண்டவர் இயேசு தனது மாட்சிமையை தான் தேர்ந்தெடுத்த சீடர்களுக்கு வெளிப்படுத்திய திருவிழாவை கொண்டாட இன்று ஒரே குடும்பமாக கூடியுள்ளோம். மண்ணகத்தில் வாழும் நாங்கள் கிறீஸ்துவை பின்பற்றி விண்ணகத்தின் சாயலை அணிந்து கொள்ள நாம் அழைக்கப்பட்டுள்ளோம். தொன்மை வாய்ந்த இறைவனின் முன்னிலையின் பொதுத்தீர்வுக்கு எம்மை இன்று முதல் தயார்படுத்துவோம். பாவத்தைகளைந்து ஆண்டவர் இயேசுவில் மறுபடியும் நாம் பிறக்கும் போது, நாம் எமது மீட்பராம் இயேசுவின் சாயலை அணிந்து கொள்கின்றோம். "இவர் எனது அன்பான சீடர்" என்று இயேசு எம்மைக் குறித்து தந்தையின் முன் சாட்சி சொல்ல, எம்மை இன்று முதல் அர்ப்பணித்துவாழ திடம் கொண்டவர்களாக, தொடரும் திருப்பலியில் பக்தியுடன் பங்கெடுப்போம்.

### முதல் வாசகம்

**அவருடைய ஆடை வெண்பனி போல இருந்தது**
**இறைவாக்கினர் தானியேல் நூலிலிருந்து வாசகம் 7: 9-10,13-14**

நான் பார்த்துக்கொண்டிருக்கையில், அரியணைகள் அமைக்கப்பட்டன; தொன்மை வாய்ந்தவர் அங்கு அமர்ந்தார்; அவருடைய ஆடை வெண்பனி போலவும், அவரது தலைமுடி தூய பஞ்சு போலவும் இருந்தன; அவருடைய அரியணை தீக்கொழுந்துகளாயும் அதன் சக்கரங்கள் எரி நெருப்பாயும் இருந்தன. அவர் முன்னிலையிலிருந்து நெருப்பாலான ஓடை தோன்றிப் பாய்ந்தோடி வந்தது; பல்லாயிரம் பேர் அவருக்குப் பணி புரிந்தார்கள்; பல கோடிப் பேர் அவர்முன் நின்றார்கள்; நீதிமன்றம் தீர்ப்பு வழங்க அமர்ந்தது; நூல்கள் திறந்து வைக்கப்பட்டன. இரவில் நான் கண்ட காட்சியாவது; வானத்தின் மேகங்களின் மீது மானிடமகனைப் போன்ற ஒருவர் தோன்றினார்; இதோ! தொன்மை வாய்ந்தவர் அருகில் அவர் வந்தார்; அவர் திருமுன் கொண்டுவரப்பட்டார். ஆட்சியுரிமையும் மாட்சியும் அரசும் அவருக்குக் கொடுக்கப்பட்டன; எல்லா இனத்தாரும் நாட்டினரும் மொழியினரும் அவரை வழிபட வேண்டும்; அவரது ஆட்சியுரிமை என்றுமுளதாகும்; அதற்கு முடிவே இராது; அவரது அரசு அழிந்துபோகாது.

**- இது ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு.**

**- இறைவா உமக்கு நன்றி**

**பதிலுரைப் பாடல்**

**உலகனைத்தையும் ஆளும் உன்னதராம் ஆண்டவர் ஆட்சி செய்கின்றார்.**
**திருப்பாடல் 97: 1-2. 5-6. 9**

ஆண்டவர் ஆட்சி செய்கின்றார்; பூவுலகம் மகிழ்வதாக! திரளான தீவு நாடுகள்
களிகூர்வனவாக! 2 மேகமும் காரிருளும் அவரைச் சூழ்ந்துள்ளன; நீதியும் நேர்மையும்
அவரது அரியணையின் அடித்தளம். பல்லவி

5 ஆண்டவர் முன்னிலையில், அனைத்துலகின் தலைவர் முன்னிலையில், மலைகள்
மெழுகென உருகுகின்றன. 6 வானங்கள் அவரது நீதியை அறிவிக்கின்றன; அனைத்து
மக்களினங்களும் அவரது மாட்சியைக் காண்கின்றன. பல்லவி

9 ஏனெனில், ஆண்டவரே! உலகனைத்தையும் ஆளும் உன்னதர் நீர்; தெய்வங்கள்
அனைத்திற்கும் மேலானவர் நீரே! பல்லவி

**இரண்டாம் வாசகம்**

**விண்ணிலிருந்து வந்த இக்குரலொலியை நாங்களே கேட்டோம்.**
**திருத்தூதர் பேதுரு எழுதிய இரண்டாம் திருமுகத்திலிருந்து வாசகம் 1: 16-19**

சகோதரர் சகோதரிகளே, நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வல்லமையையும் வருகையையும் பற்றி நாங்கள் உங்களுக்குத் தெரிவித்தபோது சூழ்ச்சியாகப் புனைந்த கதைகளை ஆதாரமாகக் கொண்டு பேசவில்லை. நாங்கள் அவரது மாண்பை நேரில் கண்டவர்கள். ``என் அன்பார்ந்த மைந்தர் இவரே. இவர் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்" என்று மாட்சிமிகு விண்ணகத்திலிருந்து அவரைப் பற்றிய குரல் ஒலித்தபோது, தந்தையாகிய கடவுளிடமிருந்து மதிப்பும் மாட்சியும் பெற்றார். தூய மலையில் அவரோடு இருந்தபோது விண்ணிலிருந்து வந்த இக்குரலொலியை நாங்களே கேட்டோம். எனவே, இறைவாக்கினர் கூறியது இன்னும் உறுதியாயிற்று. அவர்கள் கூறியதை நீங்கள் கருத்திற் கொள்வது நல்லது; ஏனெனில் பொழுது புலர்ந்து விடிவெள்ளி உங்கள் இதயங்களில் தோன்றும் வரை அது இருண்ட இடத்தில் ஒளிரும் விளக்கைப் போன்றது.

**- இது ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு**

**- இறைவா உமக்கு நன்றி**

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி**

**அல்லேலூயா, அல்லேலூயா! என் அன்பார்ந்த மைந்தர் இவரே. இவர் பொருட்டு நான் பூரிப்படைகிறேன் அல்லேலூயா**

**நற்செய்தி வாசகம்**

**மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 17: 1-9**

அக்காலத்தில் இயேசு பேதுருவையும் யாக்கோபையும் அவர் சகோதரரான யோவானையும் ஓர் உயர்ந்த மலைக்குத் தனிமையாகக் கூட்டிக்கொண்டு போனார். அங்கே அவர்கள்முன் அவர் தோற்றம் மாறினார். அவரது முகம் கதிரவனைப் போல் ஒளிர்ந்தது. அவருடைய ஆடைகள் ஒளி போன்று வெண்மையாயின. இதோ! மோசேயும் எலியாவும் அவர்களுக்கு முன் தோன்றி இயேசுவோடு உரையாடிக் கொண்டிருந்தனர். பேதுரு இயேசுவைப் பார்த்து, ``ஆண்டவரே, நாம் இங்கேயே இருப்பது நல்லது. உமக்கு ஒன்றும் மோசேக்கு ஒன்றும் எலியாவுக்கு ஒன்றுமாக மூன்று கூடாரங்களை அமைக்கட்டுமா? இது உமக்கு விருப்பமா?" என்றார். அவர் தொடர்ந்து பேசிக்கொண்டிருந்த போது ஒளிமயமான மேகம் ஒன்று அவர்கள் மேல் நிழலிட்டது. அந்த மேகத்தினின்று, ``என் அன்பார்ந்த மைந்தர் இவரே. இவர் பொருட்டு நான் பூரிப்படைகிறேன். இவருக்குச் செவிசாயுங்கள்" என்று ஒரு குரல் ஒலித்தது. அதைக் கேட்டதும் சீடர்கள் மிகவும் அஞ்சி முகங்குப்புற விழுந்தார்கள். இயேசு அவர்களிடம் வந்து அவர்களைத் தொட்டு, ``எழுந்திருங்கள், அஞ்சாதீர்கள்" என்றார். அவர்கள் நிமிர்ந்து பார்த்தபோது இயேசு ஒருவரைத் தவிர வேறு எவரையும் காணவில்லை. அவர்கள் மலையிலிருந்து இறங்கிவந்த போது இயேசு, ``மானிடமகன் இறந்து உயிருடன் எழுப்பப்படும் வரை இக்காட்சியைப் பற்றி எவருக்கும் சொல்லக் கூடாது" என அவர்களுக்குக் கட்டளையிட்டார்.

**- இது கிறிஸ்து வழங்கும் நற்செய்தி.**

**- கிறிஸ்துவே உமக்கு புகழ்.**

**விசுவாசிகள் மன்றாட்டுகள்:**

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**திருச்சபையின் தலைவராம் இயேசுவே!**

எமது திருச்சபைக்காக உம்மை நோக்கிப்பார்க்கின்றோம். எமது திருச்சபையை வழிநடத்தும் திரு அவையை பாதுகாத்து வழிநடத்தும். திரு அவையில் பணி புரியும் ஒவ்வொருவரையும் உமது ஆவியினால் நிறைத்திட வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

**எல்லா இனத்தவர் மேலும் நாடுகளின் மேலும் ஆட்சி உரிமையை உடைய இறைவா!**

எமது தேசங்களை ஆளும் ஒவ்வொரு தலைவர்களையும் ஆசீர்வத்தித்து வழி நடத்தும். எல்லா அதிகாரமும் உம்மிடமிருந்தே வருகின்றது என்பதை அறிந்து, உமது சித்தத்தை அவர்கள் நிறைவேற்ற வரமருள வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

**தந்தையினால் மாட்சிமைபடுத்தப்பட்ட இயேசுவே!**

நாங்கள் இவ்வுலக வாழ்வில் உமக்காக வாழ்ந்து தந்தையின் முன் உம்மால் மாட்சிப்படுத்தப்பட வரமருள வேண்டுமென்று, ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

**"எழுந்திருங்கள், அஞ்சாதீர்கள்" என்று சொன்ன இயேசுவே!**

நாங்கள் இவ்வுலகில் வரும் துன்பங்களுக்கும் வேதனைகளுக்கும் சோர்ந்து போகாமல், உம்மை பின்பற்றி வாழ எமக்கு உமது தூய ஆவியின் வரங்களை பொழிந்திடவேண்டுமென்று, ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

**வாழ்வளிக்கும் தந்தையே இறைவா!**

உலக நாடுகளிலே உணவின்றியும், போதிய மருத்துவ வசதியின்றியும் அல்லலுறும் அனைவரையும் காத்து, அவர்களுக்கு வேண்டிய அனைத்தையும் அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**ஆறுதல் அனைத்திற்கும் ஊற்றாகிய இறைவா!**

ஆதரவற்றோர், கைவிடப்பட்டோர், நோயுற்றோர் மற்றும் வறுமையில் வாடுவோர் அனைவரும் உமது பாதுகாப்பையும், பராமரிப்பையும் பெற்று மகிழ்ந்திட வேண்டுமென்றும், உடலின் உயிர்ப்பினால் மாட்சிபெற்ற உம் திருமகனைப் போன்று, உள்ளத்தின் உயிர்ப்பினால் உமது மாட்சியில் பங்குபெறும் தகுதி அடையுமாறு எம் நாட்டினர் அனைவருடைய வாழ்வையும் புதுப்பிக்க வேண்டுமென்றும், உலகப் பற்றினால் உண்மைக் கடவுளாகிய உம்மை மறந்து வாழும் இளைஞர்கள் நீரே ஆண்டவர், நீரே கடவுள் என்பதை உணர்ந்து உம்மில் புதிய வாழ்வைக் காண மனமாற்றம் பெற வேண்டுமென்று உயிர்த்த இயேசுவின் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

**உருமாற்றத்தின் தேவனே,**

உம்மை இன்னும் அறிந்து கொள்ளாத எல்லா மக்களும் நீரே உண்மையான இறைவன் என்பதை அறிந்து கொள்ள உதவி செய்யும். அவர்களும் உம்மை ஏற்றுக் கொண்டு, நித்திய பேரின்ப வீட்டை வந்தடைய வேண்டுமென்று, இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.